(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 10 (1).]

# பாராளுமன்றம்

## 10ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 சனவரி 27 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## 2014 பெப்புருவரி 05, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சுகாதார அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 ஓகத்து மாதம் 08 ஆம் திகதிய 1770/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 நவெம்பர் மாதம் 08 ஆம் திகதிய 1783/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதிய 1797/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63(2)(ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 நவம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1837/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

# 2014 பெப்புருவரி 18, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1946/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஓராண்டு காலம் தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் நம்புக்கனையில் அமைந்துள்ள வெள்ளைத் தும்புத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு தொழில்களின்றி பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளைத் தும்புத் தொழிற்சாலைசார்ந்த நிலையத்தினால் வேலையில்லாத இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறியொன்று நடத்தப்பட்டு வந்ததென்பதையும்;

(iii) புத்தாக்கங்களுக்காக சனாதிபதி விருதினைக் கூட வென்றெடுத்துள்ள மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பதானது தேசிய ரீதியில் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மீண்டும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2465/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) இலங்கை கிரிக்கெட் சபைக்குச் சொந்தமான கிரிக்கெட் மைதானங்களால் ஏற்பட்ட மொத்தச் செலவினங்களை ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

(ii) மேற்படி செலவினத்தின் ஒதுக்கீடுகளின் மூலதனம் மற்றும் வட்டி உட்கூறுகள் யாவை என்பதையும்;

(iii) (அ) (i) குறிப்பிடப்பட்ட கிரிக்கெட் மைதானங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானங்களை ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3061/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஹொறனை, மத்துகமை மற்றும் களுத்துறை ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அனேக பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகள் நிதியின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்தில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணிப்புக்காக அரசாங்கம் ஒதுக்கிய நிதிக்கு என்ன நடைபெற்றது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் தேவையான நிதித்தொகை யாது;

(iv) உரிய நிதி ஏற்பாடுகளை விரைவில் ஒதுக்கீடு செய்து, குறித்த பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3143 / '12

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) சுமார் நாற்பத்து மூன்று இலட்சம் பாடசாலை மாணவர்களில் உயர் கல்விக்கான வரத்தை பெறுகின்றவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(ii) உலகத்தின் ஏனைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் மேற்படி சதவீதமானது ஆகக் குறைந்த மட்டத்தில் உள்ளதென்பதை எற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) கல்விக்காக 2012 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் செலவிடப்பட்ட பணத் தொகை அந்தந்த வருடங்களின் மொத்த உள்நாட்டு வருமானத்தின் சதவீதமாக தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டில் கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத் தொகை மொத்த உள்நாட்டு வருமானத்தில் எத்தனை சதவீதமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலைக் கல்விக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் சேகரித்தல் தற்போது பொதுவாக நடைமுறையிலுள்ள செயற்பாடாகும் என்பதையும்;

(ii) அரசாங்கம் கல்விக்கு போதியளவு பணத்தை ஒதுக்காமையே இதற்கான காரணம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

3347/ '12

கௌரவ பி. ஹரிசன்,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வலு, சக்தி அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள அரச வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்நிறுவனங்களில் அரச வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவையென்பதையும்;

(iv) இவ்வுத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கு கொடுப்பனவுகள் செய்யப்படும் முறை யாதென்பதையும்;

(iii) இவ்வாகனங்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களை உபயோகிக்கும் உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள அரச வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட வாகனங்களை வேறுபடுத்தி இனங்காணும் முறையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது பற்றித் தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அரச வாகனங்களில் அரச இலச்சினையுடன் உரிய நிறுவனத்தின் பெயர் குறிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3618/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுற்றுலாத் துறைக்கும் கலாச்சாரத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ள "சீகிரிய" தொல்பொருளியல் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பொறுப்பாகவுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) சீகிரியவிற்கு பிரவேசிக்கும் சரளைக் கற்கள் கொண்ட பாதையை புனரமைப்பதற்கும் சீகிரியவை சுற்றிலும் காணப்படுகின்ற துப்பரவேற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி சரளைக் கற்கள் பாதையை புனரமைக்கும் நிறுவனம் தென்பதையும்;

(iv) சீகிரிய நகரை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை மேற்கொள்கின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(v) சீகிரிய தொல்பொருளியல் பிரதேசம் சார்ந்ததாக ஈட்டப்படும் வருமானம் உரித்தாகின்ற தரப்பினர் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3695/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை வங்கியின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு இலங்கை வங்கியினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக இலங்கை வங்கியினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3912/ '13

கௌரவ ருவன் ரணதுங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) முப்படைகளின் மருத்துவ சேவையிலிருந்து சட்டரீதியாக நீங்கியுள்ள மருத்துவர்களை மீண்டும் அரசாங்க மருத்துவ சேவைக்கு ஆட்சேர்க்கும்போது சேவை அனுபவம், தரம் மற்றும் சேவை மூப்பு கவனத்திற் கொள்ளப்படாது இவர்கள் ஆரம்ப தரத்தின் மருத்துவர் பதவியில் அமர்த்தப்படுகின்ற அநீதியானதொரு முறையியல் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இராணுவ சேவையிலிருந்து நீங்கி தொடர்ந்தும் நாட்டுக்கு சேவையாற்றுவதற்கு விரும்புகின்ற பெரும்பாலான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இந்த நிலைமை காரணமாகியுள்ளது என்பதையும்;

(iii) இவ்வாறானதொரு நிலைமையிலும், அரசாங்க மருத்துவ சேவையில் இணைந்து கொண்ட மருத்துவர் திரு எம்.டி.டபிள்யு. லொக்குகே உள்ளிட்ட மருத்துவர்கள் பலர் தற்போது கடும் அநீதிக்கு உள்ளாகி வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தரத்தை குறைத்து மேற்படி மருத்துவர்களை அரசாங்க மருத்துவச் சேவைக்கு ஆட்சேர்ப்பதானது, இராணுவ சேவையின் கீழ் இவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையைத் தவறொன்றாகக் கருதி தண்டனை வழங்குதலாக அமையாதா என்பதையும்;

(ii) யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் முப்படையின் மருத்துவ படையணியில் இணைந்து ஆற்றியுள்ள சேவையை பாராட்டாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மருத்துவர்களை ஆட்சேர்க்கின்றபோது தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவுகள் மற்றும் 14.4 மற்றும் VII ஆம் அத்தியாயத்தின் 9.3 மற்றும் 9.4 பிரிவுகளுக்கு அமைய பெற்றுக் கொடுக்கத்தக்க அனுசரணைகளைப் பெற்றுக் கொடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3939/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு ஒரு பங்கேனும் உரித்தானதாகவுள்ள மின்சார உற்பத்தி, மின்சார அனுப்பல், விநியோகம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காகத் தாபிக்கப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பங்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பங்குதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளர் சபை உறுப்பினர்களிலிருந்தும் இலங்கை மின்சார சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4173/ '13

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியானது, நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் வருகின்ற ஒரு நியதிச்சட்ட நிறுவனமா என்பதையும்;

(ii) இன்றேல், இது அமைச்சின் பொறுப்பில் இல்லாத சுயாதீனமான ஒரு நிறுவனமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை மத்திய வங்கியின்,

(i) பிரதம கணக்கீட்டு அலுவலர் யார் என்பதையும்;

(ii) நாணயச் சபையின் கடமைகள் யாவை என்பதையும்;

(iii) முகாமைத்துவ மற்றும் நிருவாகத் தீர்மானங்களின் இறுதி அதிகாரி யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை மத்திய வங்கிக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றும், சம்பளக் கட்டமைப்பொன்றும் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை அங்கீகரித்துள்ள அதிகாரி யார் என்பதையும்;

(iii) அதற்கு தேசிய சம்பளங்கள், ஆளணியினர் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கை மத்திய வங்கியின் பணியாட்டொகுதியின் சம்பள மீள்திருத்த முறை மற்றும் அதற்காகப் பயன்படுத்துகின்ற தகவுதிறன்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி (இ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பளக் கட்டமைப்பை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4252/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1988.06.07 ஆம் திகதிய 509/7 ஆம் இலக்க இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணங்களின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் முதலாவது வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேவைப் பிரமாணத்தில் இது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு யாதென்பதையும்;

(iii) அவ்வாறனதொரு பிரிவு இல்லையெனில், மேற்படி வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை நியமனக் கடிதங்களில் சேர்ப்பதற்கு மேற்படி சேவைப் பிரமாணத்தின் 28ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) சேவைப் பிரமாணத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாதிருப்பின் மற்றும் 28 ஆம் பிரிவுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் மேலே கூறியவாறு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களில் (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை சேர்க்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட நியமனக் கடிதங்களில் மேற்படி சேவைப் பிரமாணத்திற்கு ஒவ்வாதவாறு நிபந்தனைகள் சேர்க்கப்பட்டமையால் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ள உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்நிவாரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1965/ '11

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மலாமுர கால்வாய்க்கு குறுக்காக பாலமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது வரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடையில் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக மேற்படி பாலத்தை துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மலாமுர கால்வாயின் குறுக்காக பாலத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பாலத்தின் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2469/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) "தெயட்டகிருல" கண்காட்சி தொடர்பாக,

(i) இற்றைவரை நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அக்கண்காட்சிகள் ஒவ்வொன்றும் நடத்தப்பட்ட இடங்களையும்;

(iii) ஒவ்வொரு கண்காட்சிக்குமான செலவினத்தை வெவ்வேறாகவும்;

(iv) எதிர்காலத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கண்காட்சிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் நடத்தப்பட்ட "தெயட்டகிருல" கண்காட்சியுடன் தொடர்புபட்டதாக,

(i) அது நடத்தப்பட்ட திகதியையும்;

(ii) கண்காட்சித் திடலுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் அமைவிடம் மற்றும் அதன் அளவையும்;

(iii) மொத்தச் செலவு மற்றும் ஒவ்வொரு அமைச்சுக்கான செலவையும்;

(iv) மூலதனப் பொருட்களுக்காகச் செலவிட்ட தொகையை மொத்தச் செலவினத்தின் சதவீதமாகவும்;

(v) எஞ்சியுள்ள மூலதனப் பொருட்கள் அல்லது கட்டிடங்களையும்;

(vi) மேற்குறிப்பிட்ட மூலதனப் பொருட்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3431/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் இற்றைவரை இனங்காணப்பட்டுள்ள தாவர இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தாவர இனங்களில் இலங்கைக்கே உரியதான தாவர இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவற்றில் தற்போது அழிவடைந்துள்ள தாவர இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அழிவடைந்துள்ள மேற்படி தாவர இனங்களின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இலங்கையில் தாவர இனங்கள் அழிவடைவதற்கும் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதற்கும் ஏதுவாகின்ற காரணிகள் யாவை என்பதையும்;

(vi) அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள தாவரங்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கையில் மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு நடப்பட்டுள்ள மரக்கன்று வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மரக்கன்றுகளை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அழிவடைந்துள்ளதும் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதுமான மரக்கன்று வகைகள் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ளதா என்பதையும்

(v) மேற்படி மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடந்த 05 வருட காலத்தினுள் வருடாந்தம் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3903/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மகாவலி கங்கையை அண்டியதாக மணல் அகழ்வுக்கு அனுமதி அளிக்கக்கூடிய, கூட்டுறவுச் சங்கங்களை தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மகாவலி கங்கையிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மணலை ஏற்றிச் செல்வதற்கு ஏதேனுமொரு கட்டணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கட்டணத்தை அறவிடும் தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iv) மணல் அகழ்வு உரிமப் பத்திரமொன்றை வழங்குவதற்காக அறவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2014 பெப்புருவரி 19, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2451/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வள கங்கை கருத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தற்போது பாதுகாப்பற்ற பிரதேசத்தில் காணப்படும் பெருமளவிலான காணிகளை அபிவிருத்தி செய்ய முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(v) அதற்கான நிதியை வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) அவ்வாறாயின், மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2681/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கொழும்பு கொமர்சல் கம்பனி (CCC) லிமிட்டட் தொடர்பாக,

(i) மகிந்த சிந்தனை கொள்கைகளுக்கு எதிராக முகாமைத்துவத்தை தனியர் மயப்படுத்துவதற்கு அல்லது தனியார்த் துறைக்கு மாற்றுவதற்கான காரணம் யாவை என்பதையும்;

(ii) புதிய உரிமையாளர்கள் அல்லது முகாமைத்துவப் பங்காளர்களையும், ஒப்பந்தத்தையும்;

(iii) முகாமைத்துவக் கணக்குகள் எப்போது சமர்ப்பிக்கப்பட்டன என்பதையும்;

(iv) இன்றேல், எப்பொது சமர்ப்பிக்கப்படும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) "CCC" லிமிட்டட்டின் காணிகளை வெளிநாட்டவருக்கு விற்பதன் காரணங்களையும்;

(ii) காணிகளின் விற்பனை விலையையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல்களில் 100% வரி செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், செலுத்திய திகதியையும்;

(v) இன்றேல், செலுத்தாமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்படி காணி கொடுக்கல் வாங்கல்களில் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், கேள்விப் பத்திர மதியுரை அல்லது தெரிவுக் குழுவின் உறுப்பினர்களையும்;

(iii) இன்றேல், அது மேற்கொள்ள அடிப்படை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3264/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கெட்பதற்கு,— (2)

(அ) (i) கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக 2012 ஒகத்து மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி நிலையங்களால் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, அதற்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை, சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கொரிய அரசின் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டு கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டுக் கடவுச் சீட்டு கட்டாயமாக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3348/ '12

கௌரவ பி. ஹரிசன்,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3469/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சனாதிபதியவர்கள் பங்கேற்றுள்ள வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சுற்றுப் பயணத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின்போதும் சனாதிபதியவர்களுடன் பயணம் செய்தோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின்போதும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணம், பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கை மூலம் நாட்டுக்குக் கிடைத்த அல்லது கிடைத்துக்கொண்டிருக்கின்ற அல்லது கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3928/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகரத்தை அழகுபடுத்துவதும், அபிவிருத்தி செய்தலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு நோக்கமாகுமெனக் கூறப்பட்டபோதிலும், கொழும்பு 15, முகத்துவாரம், இப்பகெவத்த என அழைக்கப்படுகின்ற இடம் இன்னமுமே மிகவும் அசுத்தமாகக் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) அவ்விடத்தில் உள்ள முற்றாகவே சீர்குலைந்துள்ள பொது மலசலகூடத்தொகுதி சுற்றுச்சூழலுக்கு துர்நாற்றத்தைப் பரப்புகின்ற ஓரிடமாக மாறியுள்ளதென்பதையும்;

(iii) அழிவடைந்துள்ள மலசலகூடங்களிலிருந்து பெருக்கெடுக்கின்ற நோய்க் கிருமிகளுடன் கூடிய நீர் காரணமாக பிரதேசவாசிகள் கடுமையான சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அப்பிரதேசத்தில் மனித வாழ்க்கைக்கு பொருத்தமான சுற்றாடலை உருவாக்குவதற்கும்;

(ii) அழிவடைந்துள்ள மலசலகூடங்களுக்குப் பதிலாக புதிய மலசலகூடத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3943/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 முதல் 2013 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும்,

(i) உள்ளடக்கியுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனவா என்பதையும்;

(iv) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை சபா பீடத்தில் வைப்பாரா என்பதையும்;

(v) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

4075/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டிலும், 2013 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் இன்று வரையிலும் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் போக்குவரத்து பொலிஸாருக்கு அறியக்கிடைத்த விபத்துக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விபத்துக்களால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை, அங்கவீனமடைந்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவன்பதையும்;

(iii) வீதி விபத்துக்களுக்கு அதிகளவில் உள்ளாகும் வாகன வகைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி விபத்துக்களை குறைப்பதற்காக போக்குவரத்து பொலிஸாரும் போக்குவரத்து அமைச்சும் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வீதி விபத்துக்களை ஏற்படுத்தியமைக்காக குற்றவாளியாக்கப்பட்டு சாரதி உரிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்குரிய தண்டனைக்கு ஆளாகிய ஒருவர் மோசடியான விதத்தில் வேறு தகவல்களை சமர்ப்பித்து புதிய சாரதி உரிமப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்

(ii) இவ்வாறானவர்களை இனங்காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4139/ '13

கௌரவ அஜித் பி பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எஹெலியகொடை-தெஹிஓவிட்ட வீதியையும் (பனாவல வீதி) எஹெலியகொடை-கிரிஎல்ல வீதியையும் (நெந்துரண வீதி) விஸ்தரிப்பதற்காக காணிகளைக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4250/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் கிண்ணியாவின் கரையோரத்தில் வசித்த மக்கள் நடுவூட்டுக் கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள் என்பதையும்;

(ii) மீளக் குடியமர்த்தப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், இம்மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மீளக் குடியமர்த்தப்பட்ட நாள் தொடக்கம் இற்றை வரையில் குடிநீரைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இம்மக்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வீதிக் கட்டமைப்பு, குடிநீர் வசதிகள், போக்குவரத்து ஆகிய அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதாக அதிகாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வாக்குறுதிகளை அளித்த போதிலும், மேற்படி விடயம் தொடர்பில் இற்றை வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், மீளக் குடிமர்த்தப்பட்ட இம்மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

4331/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1956 ஆம் ஆண்டில் வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதிய நலன்கள் 1972 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் 1977 இல் மீளத்தாபிக்கப்பட்டதுடன், 1996 இல் மீண்டுமொருமுறை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1996 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அரசாங்க வங்கி ஊழியர்களுக்கு 2009 சனவரி 01 ஆம் திகதி முதல் ஓய்வூதிய உரித்து வழங்கப்படுமென நிதி, திட்டமிடல் அமைச்சர் வெளியிட்டுள்ள கூற்றுக்கு அமைய மேற்படி ஊழியர்களுக்கு குறித்த நலன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) திறைசேரிச் செயலாளரினால், அந்தந்த அரச வங்கிகளுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய ஓய்வூதியத் திட்டமொன்றை தாபிப்பதற்காக 2011.05.19 ஆம் திகதி எழுத்து மூலமான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வங்கி அலுவலர்கள் மேற்படி கட்டளையை அமுல்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை வங்கியின் முகாமைத்துவத்தின் சிபாரிசின் பேரில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு திறைசேரியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள 2012.05.23 ஆம் திகதிய ஓய்வூதிய பிரேரணை இதுவரை அங்கீகரிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2457/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய பிரதேச சபை அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பின், நிர்மாணப் பணிகளை நிறுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமாயின் எத்திகதியில் என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2684/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் எண்ணக்கருவை அவர் விளக்குவாரா?,

(ஆ) (i) இற்றை வரை ஒவ்வொரு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியிலும் ஏற்படுத்தப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொழில்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இத்தொழில்கள் நிரந்தரமானவையும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமா என்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) (i) அனுராதபுர தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு உண்மையிலேயே எச்செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலவிடப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்குத் தேவைப்பட்ட ஊழியம் மற்றும் சொத்துக்கள் போன்றவை எந்தவிதக் கொடுப்பனவுமின்றிப் பாவிக்கப்பட்டதா என்பதையும்; உதாரணமாக, ஆயுதப் படை ஆளணியினர் மற்றும் தொழிலாளர்கள் போன்றோரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் போன்றவையும் செலவு ஆக்கக் கூறுகளாக மொத்த செலவுக் கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iii) இன்றேல், குறிப்பிட்ட கண்காட்சிக்கான செலவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பதையும்;

(iv) எதிர்வரும் மூன்று தேசத்திற்கு மகுடம் கண்காட்சிகளுக்கும் ஏற்படுமென எதிர்பார்க்கின்ற செலவினைத் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2895/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டவாறு 2002 - 2003 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரி விலக்கின் பெறுமதியானது இலங்கை ரூபாய் 1000 பில்லியன் அளவிற்கு பெரும் தொகையாக இருந்ததா என்பதையும்;

(ii) இல்லையெனில், அதன் உண்மையான பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட வரி மன்னிப்பு 2004 - 2005 இல் விலக்கிக் கொள்ளப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஐக்கிய தேசியக் கட்சியினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்பு பிழையானதும் சட்டவிரோதமானதும் ஆகும் என்பதை 2004 இல் இருந்த அரசாங்கம் நிரூபித்துள்ளதா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வரிவிலக்கு விலக்கிக்கொள்ளப்பட்டதன் பின்னர் இற்றைவரை அறவிடப்பட்ட வரியின் பெறுமதியை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) அவ்வித குறைந்த பெறுமதியான வரிகளை அறவிட்டமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மன்னிப்புகளை எதிர்மறையான விமர்சனங்களை முன்வைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் 2004 இற்கு பின்னர் ஏதவாது வரி மன்னிப்புகளை முன்வைத்ததா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்புகளின் பெறுமதியையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3292/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல், 2008 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பாக ஆராய்வதற்ககென அமைச்சர்கள் உப-குழுவொன்று நியமிக்கப்படல் வரையான காலப்பகுதிக்குள் ஊடகவியலாளர்களுக்கு நேரிட்ட துன்புறுத்தல்கள் தொடர்பாக கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சர்கள் உப-குழு நியமிக்கப்பட்ட பின்னர் இது வரை கடத்திச் செல்லல் மற்றும் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இச் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2014 பெப்புருவரி 19, புதன்கிழமை)

2905/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுதந்திரம் பெற்றதிலிருந்து இற்றைவரை இலங்கையை மாறி மாறி ஆட்செய்துகொண்டு வருகின்ற அரசாங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் அமைச்சரவையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக ஆரம்பம் முதல் முடிவு வரை எத்தனை என்பதையும்;

(iii) 1985, 1995, 2005 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு அமைச்சருக்குமான சராசரிச் செலவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை சட்டத்தின் மூலம் ஏன் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு நாட்டுக்கு உதவியுள்ளதா அல்லது நாட்டின் மீது மேலும் சுமையைச் சுமத்தியுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3736/ '13

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேராதனை, கிறிஸ்ரோபர் வீதி, 124டி இலக்கத்தில் வசிக்கும் திரு. எச்.எல். பிரேமசந்திர, (சேவை இலக்கம் 1060814) இலங்கை வங்கியின் கந்தப்பொளை கிளையில் நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றியபோது, குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் 2000.04.18ஆம் திகதி சேவை இடைநிறுத்தப்பட்டு, குற்றச்சாட்டினை நிரூபிக்க முடியாத நிலைமையின் கீழ் 2001.05.14ஆம் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட ஒருவராவார் என்பதையும்;

(ii) 2010.03.09ஆம் திகதியிலிருந்து 2010.05.16ஆம் திகதி வரை இவர் கடமை லீவில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை வங்கியின் பேராதனைக் கிளையில் தற்போது கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி வகிக்கும் திரு. பிரேமசந்திரவுக்கு, 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலவிய நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை நிலைமையைக் கவனத்தில் கொண்டு நிலுவைச் சம்பளம் உட்பட்ட ஏனைய பணியாளர் உரிமைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 பெப்புருவரி 20, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2439/ '12

கௌரவ புத்திக பதிரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மாத்தறை மாவட்டத்தில் நில்வளா பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் அமைந்துள்ள இன்னாக் காட்டுப் பிரதேசத்தில் பெருந்தொகையான வயல்கள் பாழடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகளை நெற்பயிர்ச்செய்கைக்காகவோ வேறு பயிரினங்களைப் பயிரிடவோ பொருத்தமான வகையில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிலத்தைச் சாகுபடி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2713/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபைக்கு இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டு வரமுன், அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளருடனான முதல் சந்திப்பு உத்தியோகபூர்வமாக எப்போது இடம்பெற்றது என்பதையும் ;

(ii) இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களையும்;

(iii) மேற்கூறிய சந்திப்பின் பின்னர், மேற்கூறியவாறான தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டுவரலாமென்று எதிர்பார்க்கப்பட்டதா என்பதையும்;

(iv) இலங்கையைப் பொறுத்தவரை புறக்கணிப்பு, அகந்தை, செயற்திறனின்மை என்பன, மேற்கூறிய தீர்மானத்தில் இலங்கைத்தரப்பு தோல்வியடைய காரணமாய் அமைந்தனவா என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்துடன் தொடர்புடைய, இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட தகுந்த நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, 2012 மே 18 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளர் திருமதி ஹிலரி கிளின்டனைச் சந்திக்க ஏன் இணக்கம் தெரிவித்தது என்பதையும்;

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் அச்சந்திப்பின் பிரதிபலனாக தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3351/ '12

கௌரவ பி. ஹரிசன்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3624/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள், அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹல்தும்முல்ல பிரதேச சபையினால் ஹல்துமுல்ல, போகஹபிட்டிய, சொரகுணே வனத்தினை அண்டிய பகுதி துப்பரவு செய்யப்பட்டு வீதியொன்று நிர்மாணிப்பு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) இதனுடன் தொடர்புடையதாக நடைபெறுகின்ற காடழிப்பு தொடர்பாக வேலி ஒயா விவசாய அமைப்பு மற்றும் பிக்குகள் அமைப்பின் ஊடாக சனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதி நிர்மாணிக்கப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்காக சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3698/'13

கௌரவ அனுர திசாநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணப் பட்டியலில் எரிபொருள் சீராக்கல் கட்டணம் சேர்க்கப்பட்டு அறவிடப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணம் விதிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணத்தை அறவிடுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணம் அறவிடப்பட்ட தினம் முதல் ஒவ்வொரு மாதத்திலும் மின்சார சபை பெற்ற வருமானம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) எரிபொருள் சீராக்கல் கட்டணம் தற்போதும் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(vi) இன்றேல், அதனை அறவிடுதல் நிறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3931/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'பி வீ ஒயில்' எனும் சிங்கப்பூர் கம்பனியுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகிகள் 2011.10.07 ஆம் திகதி மற்றும் 2012.01.25 ஆம் திகதி ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் கைச்சாத்திட்ட ஊழல் மிகுந்த உடன்படிக்கையை மீண்டும் புதுப்பிக்க தயாராகின்றனர் என்பதையும்;

(ii) ஆறு மாத காலங்களுக்கு இரண்டு இலட்சத்து நாற்பது ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்வதற்கு இக் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 116 கோடி நட்டமேற்பட்டதென்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் இவ்வுடன்படிக்கையை மீண்டும் கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளதென தொழிற் சங்கங்கள் குற்றம் காட்டுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழல்கள் காரணமாக நாளுக்கு நாள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைகின்றது என்பதையும்;

(ii) இந் நட்டத்தை ஈடுசெய்ய அடிக்கடி எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகின்றது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

4001/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக களுத்துறை மாவட்டத்தில் மில்லனிய தோட்டம் (ஹொரேகந்த பிரிவு) என்ற பெயரில் காணி ஒன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி காணியின் ஒரு பகுதியான 9ஆம் இலக்க காணித்துண்டில் அமைந்துள்ள 9 ஏக்கர் 3 ரூட் 29.85 பர்ச் பரப்பளவு கொண்ட கருங்கற் பாறையின் மதிப்பீட்டு பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருங்கற் பாறையை பாணந்துறை நல்லுருவவில் வதியும் கலாநிதி திரான் த சில்வா என்பவருக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி தீர்மானம் எட்டப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இந்த தீர்மானத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருங்கற் பாறையை குத்தகைக்கு வழங்குதலுடன் தொடர்புடைய வருடாந்த குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி குத்தகைத் தொகை தீர்மானிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(vi) மேற்கூறிய குத்தகை வழங்கல் தொடர்பிலான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vii) மேற்படி குத்தகை உடன்படிக்கையின் பிரதியொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்

(viii) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்:

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல் பற்றிய நடவடிக்கைகளின்போது வெளிப்படைத்தன்மையை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4076/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க சேவை அலுவலர்களுக்கான ஓய்வுபெறும் வயதெல்லை யாது என்பதையும்;

(ii) இந்த வயதெல்லையைத் தாண்டிய வகையில் எவரேனுமொரு அலுவலரை அரசாங்க சேவையில் ஈடுபடுத்தும்போது பின்பற்றப்படுகின்ற அளவுகோள்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற அலுவலர்களை மீண்டும் சேவைக்கு ஆட்சேர்க்கின்ற போது இவர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சம்பளங்கள், மற்றும் வாகனம், எரிபொருள், தொலைபேசி போன்ற வேறு வசதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயத்தினதும் அளவுகள் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஆட்சேர்ப்புகள் மற்றும் உரிய வசதிகளைச் செய்து கொடுப்பதானது, அவை தொடர்பில் அமுலிலுள்ள சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை நிர்வாக சேவையில் ஓய்வுபெற வேண்டிய வயதையும் தாண்டி தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள அமைச்சுச் செயலாளர்கள் அல்லாத அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்கள் சேவையாற்றுகின்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் யாவை என்பதையும்;

(iii) ஓய்வுபெற வேண்டிய வயதையும் தாண்டி தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள அமைச்சுச் செயலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள், வயது மற்றும் சேவையாற்றுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4215/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2112 ஆம் ஆண்டுகளில் இலங்கை தரைப்படைக்கு உணவு, பானங்களை வழங்கிய பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதில் தற்போது செலுத்தி முடிக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மூன்றாண்டுகளுக்கும் செலுத்த வேண்டியுள்ள நிலுவைப் பணத் தொகை அந்தந்த ஆண்டுகளுக்கமைய எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பணத் தொகைகள் செலுத்தப்படாத காரணத்தினால் ஏற்புடைய வழங்கல்களை மேற்கொள்வது சிரமமாயுள்ளதென குறித்த வழங்குநர்கள் அறிவித்துள்ளார்களென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிலுவைப் பணத் தொகைகளை செலுத்தி முடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) நிலுவைப் பணத் தொகைகளை செலுத்தி முடிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4251/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துவில் பிரதான வீதி மற்றும் மத்திய வீதியை இணைக்கின்ற ஜும்மா பெரிய பள்ளிவாசல் வீதி மறுசீரமைக்கப்படாமையின் காரணமாக மேற்படி வீதி போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையில் உள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வீதி சேதமடைந்துள்ளதன் காரணமாக அதனைப் பயன்படுத்துகின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வீதியை மறுசீரமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2460/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வலா கங்கையின் மாத்தறை மஹாநாம பாலத்திலிருந்து கடல் வரையான பகுதியை ஆழமாக்கும் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டத்தின் மூலம் நிறைவேற்ற உத்தேசித்துள்ள நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக செலவிட உத்தேசித்துள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அதற்குத் தேவையான நிதி பெற்றுக் கொள்ளப்படுவது உள்நாட்டு நிதியங்களிலிருந்தா அல்லது வெளிநாட்டு நிதியங்களிலிருந்தா என்பதையும்;

(v) வெளிநாட்டு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுமாயின், அந்நாடு அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2714/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இன்றுள்ளவாறு நாட்டிலுள்ள தேசிய வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை அவர் தனித்தனியாக கூறுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகள் தொடர்பில்,

(i) மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) படுக்கைகளுக்கும் வைத்தியர்களுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்;

(iii) படுக்கைகளுக்கும் தாதியர்களுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்;

(iv) வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

கௌரவ பி. ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3904/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்னேரிய கிரிதலே தேசிய வனப் பூங்காவின் கிழக்கு எல்லையில் ஐந்து ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டட நிர்மாணம் தொடர்பாக எழுத்து மூலமான அனுமதியை கொண்ட ஆவணத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி அனுமதியை வழங்கிய தரப்பினர் யாரென்பதையும்;

(v) அவ்வாறு அனுமதி பெறப்படவில்லை எனின், ஏன் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2896/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்போது கோமறைக் கழகம் இயங்குகிறதா என்பதையும்;

(ii) இதற்கு முன்னர் அத்தகைய கழகம் எப்போதாவது இயங்கியதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அது இயங்கிய காலப்பகுதி எது என்பதையும்;

(iv) கோமறைக் கழகம் அல்லது அதனையொத்த அமைப்புகள் இல்லாதொழிக்கப்பட்ட சூழ்நிலையில், நீதித்துறை முறையில் மேன்முறையீடுகளை மேற்கொள்வதற்கு இன்று காணப்படுகின்ற பொறிமுறைகள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சுதந்திரமடைந்தது முதல் இன்று வரை பிரயோகிக்கப்பட்ட கடந்த காலத்தையும் அளாவிய சட்டங்கள் எவை என்பதையும்;

(ii) அவை எப்போது சட்டவாக்கம் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டன என்பதைத் தனித்தனியாகவும்;

(iii) இலங்கையில் பொதுவாக கடந்த காலத்தையும் அளாவிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

(iv) இல்லையெனில், 2003 — 2004 இல் வரி மன்னிப்புச் சட்டம் எவ்வாறு அமுல்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2014 பெப்புருவரி 20, வியாழக்கிழமை)

2303/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் டெங்கு நோய் தொற்று, வாகன விபத்துகள், தற்கொலை, உணவு நஞ்சாகுதல், உடல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகுதல் ஆகிய காரணங்களால் வருடாந்தம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட அல்லது மரணமடைந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் கல்வி பயின்ற பாடசாலைகளும் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) கடந்த வருடத்தில் பல்வேறு தவறுகளுக்காக குற்றஞ்சுமத்தப்பட்டு சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, பிள்ளையின் வயதெல்லை மற்றும் பாடசாலைக்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2014 பெப்புருவரி 21, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2787/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) திரு. சரத் பொன்சேகா எப்போது விடுதலை செய்யப்பட்டார் என்பதை இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மன்னிப்பு நிபந்தனையுடனா அல்லது நிபந்தனையின்றியா வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) திரு. சரத் பொன்சேகாவின் ஓய்வூதிய உரிமைகள் மற்றும் இராணுவப் பட்டங்கள் மீண்டும் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(iii) அவரை தற்போதும் 'ஜெனரல்' என அழைக்க முடியுமா என்பதையும்;

(iv) திரு. சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஏதாவது வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பதையும்;

(v) சனாதிபதியின் மன்னிப்பு மூலம் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்குகள் வெற்றாக்கப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) திரு. சரத் பொன்சேகாவுடன் வேலை செய்தமைக்காக அல்லது அவருக்கு உதவியமைக்காக, தொல்லை கொடுக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய அதிகாரிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டனரா அல்லது அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) திரு. சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில்,

(i) பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அழுத்தங்களைப் பிரயோகித்த நாடுகள் மற்றும் அவை எப்போது பிரயோகிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அரசியல் மற்றும் சமயத் தலைவர்களது இணக்கப்பாடுகள் ஏன் கவனத்திற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3013/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஹ/தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவரொருவர் 2007 ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று தங்காலை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகையில் இடைவழியில் தங்காலையின் அப்போதைய நகர பிதாவினால் பாரதூரமான விதத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது தொடர்பாக தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவ ஆலோசக ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் தங்காலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடு மேற்படி பொலீஸ் நிலையத்தின் முறைப்பாட்டு இலக்கம் C.W.I.B 127ஆம் பக்கத்தின் 24 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி நகரபிதாவுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தங்காலை நகரத்தின் ஓய்வுபெற்ற பிரசைகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) ஆமெனில், மேற்படி முறைப்பாடு தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மெற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3267/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையிடமிருந்து கொழும்பு மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள மொத்த நிலுவை வரிப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்காக மேற்படி மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வரிப் பணத் தொகையின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3367/ '12

கௌரவ. பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு அரவணைப்பைப் பெறுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவரின் பராமரிப்புப் பணிகளுக்கென 2013 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் உள்ள சிறுவர் தடுப்புக் காவல் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) அப்பணத்தொகை இவர்களின் பராமரிப்புப் பணிகளுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3654/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் முதனிலை பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் அமைய ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா;

(iv) ஆமெனில், ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவை;

(v) மேற்படி பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுமெனில் அதை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அம்பாறை மாவட்டத்தில் மேலே இலக்கம் (அ)(i ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் நூலகங்கள், நீர் வசதி மற்றும் துப்பரவேற்பாட்டு (மலசலகூட) வசதிகள் இல்லாத பாடசாலைகள் யாவை என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3686/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குவைட் நாட்டிற்கு தொழில்வாய்ப்புக்காகச் சென்றுள்ள இலங்கைப் பெண்கள் 300 பேருக்கும் அதிகமானவர்கள் அங்கு அவர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ள பல்வேறு தொல்லைகள், கஷ்டங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக சேவை நிலையங்களிலிருந்து தப்பிச் சென்றுள்ளதனால் வேறு எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறு கஷ்டங்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கை ஊழியர்களின் கஷ்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக குவைட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அலுவலர்களிடமிருந்து மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான முறையான, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தற்போது குவைட் நாட்டில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை துரிதமாக இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3699/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2013 பெப்ரவரி மாதத்தில் ஒரு மெட்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்ட சராசரி விலை (CIF VALUE);

(ii) மெட்றிக் தொன் ஒன்றில் அண்ணளவாக அடங்கும் பெற்றோல் லீற்றர்களின் எண்ணிக்கை;

(iii) இதற்கமைய, 2013 பெப்ரவரி மாதத்தில் துறைமுகத்திலிருந்து இறக்குகையில் நிலவிய ஒரு லீற்றர் பெற்றோலின் சராசரி விலை;

(iv) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கம் அறவிடும் ஒவ்வொரு வரியினதும் அளவுகள்;

(v) ஒரு லீற்றர் பெற்றோலிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெறுகின்ற இலாபம்;

(vi) ஒரு லீற்றர் பெற்றோலை விநியோகிப்பதற்கான செலவு மற்றும் விற்பனையின் மூலம் எரிபொருள் நிரப்பும் நிலையம் பெறும் இலாபம்;

எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3932/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கொலொன்னாவை எண்ணெய் முழுநிறை கருவிகல அமைவிடத்தில் (CPSTL) 2/3 பங்கு இந்தியன் எண்ணெய் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கொலொன்னாவையில் அமைந்துள்ள எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் சுற்றுபுறத்திலிருந்து சுவீகரிக்கப்பட்டுள்ள 80 ஏக்கர் காணியை இந்தியன் எண்ணெய் கம்பனிக்கு இலவசமாக வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4182/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவில் பாத்தகட மற்றும் தெல்கொட ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள பாரிய அளவிலான கற்குழிகள் காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சுற்றாடல் மாசடைதலைத் தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2819/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இலங்கைக்கு வருகை தருகின்ற விமானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய விமான சேவைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவை நிலையானவையா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டவையா என்பதையும்;

(iv) அவை விமானச் சேவை நடவடிக்கைகளுக்காக ஆறாவது சுயாதீனப் போக்குவரத்து அனுமதியை (sixth freedom traffic), அதாவது வேறு இரண்டு நாடுகளுக்கிடையே சேவை வழங்கும் போது தமது நாட்டிலும் தரித்து நின்று மீண்டும் பறக்கின்ற அனுமதியை, பெற்றுள்ளனவா என்பதையும்;

(v) இச்சகல விமான சேவைகளினாலும் ஒரு மாதத்திற்கு போக்குவரத்துச் செய்யக்கூடிய மொத்தப் பயணிகளையும்;

(vi) கடந்த வருடத்தில் உல்லாசப் பயணிகளின் மொத்த வருகைகள் யாதென்பதையும்;

(vii) உல்லாசப் பயணிகளின் வருகையின் இலக்கினை அடைவதற்கு இவ்விமானச் சேவைகள் எவ்வாறு உதவும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3081/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசிய அதிகாரசபை சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கையை தாமதப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்கான தடைகளை நீக்கிவிட்டு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டு உள்ளடங்களாக கடந்த 8 ஆண்டு காலப்பகுதியில் புகை பிடித்தல் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) புகை பிடித்தல் காரணமாக புற்றுநோய் அல்லது வேறு நோய்களால் பாதிக்கப்படும் நபரொருவருக்கு அரசாங்கத்தினால் செலவிட நேரிடுகின்ற பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) புகை பிடித்தல் காரணமாக நோயுற்ற நபர்களுக்கு 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மருத்துவமனை கட்டில்களின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2012 ஆம் ஆண்டு அரச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையில் புகை பிடித்தல் காரணமாக புற்றுநோய் அல்லது வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையின் சதவீதம் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை கடந்த வருடத்துடன் ஒப்பீடும் போது அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3378/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் தற்போதுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வடமத்திய மாகாணத்தில் பாடசாலைக் கல்விக்காக அம்மாகாண சபையினால் கடந்த ஐந்த ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதற்கேற்ப, கடந்த ஐந்தாண்டுகளில் மேற்படி மாகாணத்தில் ஒரு பாடசாலை மாணவனுக்காக வருடாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு மாணவனுக்கு செலவிடப்பட்ட ஒட்டுமொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் புதிய பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும், தற்போதுள்ள கட்டிடங்களை திருத்துவதற்காகவும், கடந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பாடசாலைகளில் 2012 ஆம் ஆண்டு முடிவடைகின்ற போது கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலைக்குமேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3731/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பிலியந்தலை வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் 2012.02.20 ஆம் திகதி வேவல ஆனந்த சமரகோன் வித்தியாலயத்தின் அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம்,

(i) மேற்படி பாடசாலையில் 5 ஆம் ஆண்டில் சித்தியடைகின்ற மாணவர்களை மாம்பே தர்மராஜ வித்தியாலயத்திற்கு அனுமதிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்;

(ii) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் கீழ் வேவல ஆனந்த சமரகோன் வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக பெருமளவு நிதியை அரசாங்கம் செலவிட்டுள்ளதென்பதையும்

அறிவிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வேவல ஆனந்த சமரகோன் வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிதியை யார், எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3905/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள “கூடங்குளம்” அணுசக்தி நிலையத்தை அண்மித்த பிரதேசங்களில் இடம்பெறும் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பில் ஏதேனும் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், குறித்த எழுத்துமூலமான விதப்புரையினை இந்த சபைக்கு முன்வைப்பாரா;

(iii) மேற்படி நிலையத்திலிருந்து வெளிப்படும் கதிர்களினால் உயிரினங்களுக்கு பாதகமான நிலைமைகள் ஏற்பட வாய்ப்புள்ளதா;

(iv) மேற்படி கருத்திட்டம் தொடர்பில் காணப்படுகின்ற இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நிபந்தனைகள் அல்லது உடன்படிக்கைகளை சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3933/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமானது தற்போது ரூபா 95 பில்லியனை விஞ்சியுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இக்கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் வங்கி மேலதிக பற்றுகளுக்காக மட்டும் ரூபா 43 கோடிக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டியுள்ளதா என்பதையும்;

(iii) தற்போது அரச வங்கிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்குவதை நிராகரித்துள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையின் கீழ் உயர் கடன் வட்டி நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகளிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 மார்ச்சு 04, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2946/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் உயர் கல்விக்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) உயர் கல்விக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3083/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தினுள் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்புக்கு சமாந்திரமாக விலை அதிகரித்துள்ள புகைத்தல் பொருட்கள் (சிகரெட்டுகள்) வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறு விலை அதிகரிக்காத சிகரெட் வகைகள் இருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) 2012 மார்ச் மாதத்தில் டன்ஹில் வகை சிகரெட்டின் விலை அதிகரித்த அளவு யாதென்பதையும்;

(iv) இதன் விளைவாக சிகரெட் ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கும் புகையிலைக் கம்பனிக்கும் கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் விற்பனை செய்யப்பட்ட மொத்த சிகரெட்டுக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பெறுமானங்களுக்கமைய சிகரெட் விற்பனையின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3379/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார்கள், வைத்தியசாலை தொழிலாளர்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப் பட்ட பணியாட்டொகுதியினர் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளில் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்கள் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் ஏற்ப எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக வடமத்திய மாகாண சபையினால் மேற்படி மாகாண சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையைக் கொண்டு வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தின் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வருடத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளி ஒருவருக்காக வட மத்திய மாகாண சபையினால் செலவிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3630/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்,

(i) முகாமைத்துவ பீடத்தில் விரிவுரையாளர்களது பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பீடத்தில் உள்ள பேராசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அளவையியல் விஞ்ஞான பீடத்தில் விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய கல்விசார் பணியாட்டொகுதியில் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(iv) சமூகவியல் மற்றும் மொழிப் பீடத்தில் விரிவுரையாளர்களது பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4092/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையினால், அதன் கீழ் பயிற்சி பெறும் மாணவர்களுக்காக 2013 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி செயலமர்வுகள் நடாத்தப்பட்ட திகதிகள் மற்றும் ஒவ்வொரு செயலமர்விலும் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த செயலமர்வுகளின் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி செயலமர்வுகளில் பங்குபற்றிய விரிவுரையாளர்கள் யாவர் என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு செயலமர்வுக்காகவும் போக்குவரத்து, உணவு, விரிவுரைக் கட்டணம் உட்பட மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4220/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தில் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2010, 2011 மற்றும் 2012 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் மேற்படி நிறுவனத்தினால் செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் நீதிபதிகளின் தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினால் போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் இயங்கும் விதத்திலான பல்கலைக்கழக மட்டத்திலான நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றை ஆரம்பிப்பதற்கு கௌரவ அதாவுத செனவிரத்ன நீதி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) பல்கலைக்கழக மட்டத்திலான நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றை இலங்கையில் நிறுவுவதற்கான கருத்துடன் இணங்குகின்றாரா என்பதையும்

(iii) ஆமெனின், இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3114/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து புத்தளம் மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து புத்தளம் மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாக யாதென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பல தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் புத்தளம் மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3381/ '12

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காட்டு யானைகளின் தாக்குதல்களினால் மரணிக்கும் ஆளொருவருக்காக செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை,

(i) வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) வழங்கப்படுதல் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) வழங்கப்படும் போது ஒரு நபருக்கு வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அத்தொகை போதுமானதா என்பதையும்;

(v) மேற்படி தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) அதிகரிக்கப்படுமெனில், அதிகரிக்கப்படும் பணத் தொகை மற்றும் அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காட்டு யானைகளினால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்காக நட்டஈடு செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறு செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) பயிர்ச் சேதங்களுக்கான நட்டஈட்டுத் தொகை தீர்மானிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) காட்டு யானைகளினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் மற்றும் பயிர் சேதங்கள் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டங்களை காப்பீடு செய்வதற்கான காப்புறுதித்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) துப்பாக்கிச் சூடு, மின்சாரத் தாக்கம் அல்லது வேறு முறைகளினால் காட்டு யானையொன்றைக் கொலை செய்கின்ற ஆளொருவருக்கு தண்டப் பணம் விதிப்பதற்கு அல்லது வேறு தண்டனை வழங்குவதற்கான சட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்சட்டத்தின் கீழ் விதிக்கக்கூடிய தண்டப் பணம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தண்டப் பணத்தை செலுத்தாத ஒருவரை சிறையிலிடக்கூடிய கால எல்லை யாதென்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3395/ '12

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமூர்த்தி அதிகார சபையினால் சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் முகாமையாளர்களினதும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பேணிவரப்படுகின்ற நிதியத்துக்கு இவ்வுத்தியோகத்தர்களின் மாதாந்தச் சம்பளத்திலிருந்து ரூபா 50.00 கழிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) சுமார் இரண்டு வருட காலமாக இந்நிதியத்தினால் சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட நிதியத்தினால் பேணிவரப்படுகின்ற கணக்கில் தற்போதுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்;

(ii) 2012 யூன் 30 ஆம் திகதிக்குப் பின்பு இந்நிதியத்தினால் உரித்துரிமை ஈடு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இதற்கென செலவிடப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்;

(iv) இதுவரை வழங்கப்படாத உரித்துரிமைப் பணத் தொகைகளை வழங்க துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3908/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் ஜா-எல நகரை அடுத்துள்ள தண்டுகம பிரதேசத்தில் கொண்டு நடத்தப்படும் விலங்குச் சாலைகளினதும் விலங்குகளை அறுக்கும் இடங்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் நித்தமும் குவிக்கப்படும் உயிர் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பில் நடைமுறையில் உள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கழிவுகள் தொடர்பில் ஏதேனும் சுற்றாடல் மற்றும் சுகாதார பேணல் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிபாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4093/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரை சொகுசு பயணிகள் போக்குவரத்துச் சேவைக்கான கட்டணங்கள் கணிக்கப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(ii) அரை சொகுசு பயணிகள் போக்குவரத்துச் சேவைக்கென வழங்கப்பட்டுள்ள நியமங்கள் யாவை என்பதையும்;

(iii) குறித்த நியமங்களுக்கு அமைவாக இல்லாத பேரூந்துகள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) கடந்த 03 ஆண்டு காலப்பகுதியில் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரை சொகுசு பேரூந்துகளை ஒத்த வேறு பேரூந்துகள் சாதாரண கட்டணத்தின் கீழ் சேவையில் ஈடுபடுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அரை சொகுசு பேரூந்துகளினூடாக பயணிகளிடமிருந்து மேலதிக கட்டணம் அறவிடப்படுகிறதா என்பதையும்;

(iii) அரை சொகுசு பேரூந்து சேவையை நிறுத்துவது தொடர்பாக அமைச்சர் தெரிவித்துள்ள கூற்றுக்குச் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அதன் பெறுபேறுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3131/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) யாழ்ப்பாண மாவட்டம் தொடர்பில்,

(i) 2012 சனவரி 1 முதல் ஒதுக்கப்பட்ட அல்லது பராதீனப்படுத்தப்பட்ட அல்லது பலவந்தமாக கையளிக்கப்பட்ட சகல காணிகளும் யாவை என்பதையும்;

(ii) மக்களுக்கு நட்டஈடு வழங்கி அக் காணிகளை பெற்றுக்கொண்டமைக்கான அல்லது அவற்றை மாற்றியமைக்கான காரணம் யாது என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட மாவட்டத்தில் அரச குடியேற்றங்கள் நடைபெறுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அதற்கான காரணங்கள் என்ன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2014 மாச்சு 05, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3132/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3398/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாநகர சபை தனது ஆளுகைப் பிரதேசத்தை அழகுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் நகரத்தின் பிரதானமான அரச பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் அமைந்துள்ள உள் வீதிகள் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமையால் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளன என்பதையும்;

(ii) உள் வீதிகளின் இருமருங்கிலும் ஆங்காங்கே குப்பை கூளங்கள் போடப்பட்டுள்ளமை பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாத்தறை மாநகர சபை எல்லைக்குள் பழுதடைந்துள்ள பாதைகளை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) குப்பை கூளங்களை அகற்றுவதற்கு ஒழுங்கான முறையியலொன்று பின்பற்றப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3607/ '13

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி காலப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் மத்திய நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில்

(i) பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்ததால் இழப்பீடு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடு வழங்கப்படாத முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ளப்பெருக்கு காரணமாக இப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) இப் பயிர்ச்செய்கை காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முழுமையாக சேதமடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக் காணி ஏக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஒரு ஏக்கர்வயல் காணிக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஏனைய மேலதிக பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறாயின் வழங்கப்பட்டள்ள இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிட்டவாறு இழப்பீடு வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்

4094/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் வ/ப ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தினால் யாதேனுமொரு வகை விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமானக் கொள்வனவு அல்லது குத்தகைக்கு பெறுதல் தொடர்பில் பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) கொள்வனவுகள் அல்லது குத்தகை அடிப்படையிலான பெறுகைகள் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதற்காக விண்ணப்பித்திருந்த நிறுவனங்கள் மற்றும் விலைகள் யாவையென்பதையும்;

(iv) விண்ணப்பித்திருந்த நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட விமானக் கொள்வனவு அல்லது குத்தகை அடிப்படையிலான பெறுகைகள் சார்பில் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப் பணத் தொகை எவ்வாறு பெறப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை கடனாகப் பெறப்பட்டிருப்பின், கடன் தொகையின் அளவுகள், வட்டி வீதங்கள் மற்றும் கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4102/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற எண்ணெய்யை" களஞ்சியப்படுத்துவதற்கும் ஏற்றிச் செல்வதற்கும் அனுமதியளிக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரமொன்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட "எரி எண்ணெய்யை" களஞ்சியப்படுத்தும் மோசடிச் செயலை முல்லேரியா மற்றும் தெக்கட்டன மோரகல பிரதேசத்தில் பொலிசார் கண்டுபிடித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சுற்றிவளைப்புகளுக்கு அமைய,

(i) மேற்படி எரி எண்ணெய் ஏற்றிச் செல்லப்பட்ட இடம் யாதென்பதையும்;

(ii) பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதா என்பதையும்;

(iii) அதன் போது கைது செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் யாவையென்பதையும்;

(iv) ஏற்றிச்செல்லப்பட்ட எண்ணெய்யின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எரிஎண்ணெயின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3133/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப் பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3419/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கடந்த 10 வருட காலத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு அரசு வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவை;

(iii) முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டர் சைக்கிள்கள் சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுகின்றவர்களை ஊக்குவிப்பதற்காக அந்த வாகனங்களின் உதிரிப்பாகங் களுக்கு வரிச் சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஏற்கனவே அவ்வாறான சலுகைகள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3608/ ’13

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி காலப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் ஹொரோபத்தான பிரதேச செயலாளர் பிரிவில்

(i) பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்ததால் இழப்பீடு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடு வழங்கப்படாத முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ளப்பெருக்கு காரணமாக இப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) இப் பயிர்ச்செய்கை காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முழுமையாக சேதமடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக் காணி ஏக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஒரு ஏக்கர்வயல் காணிக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஏனைய மேலதிக பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறாயின் வழங்கப்பட்டள்ள இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிட்டவாறு இழப்பீடு வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4103/ ’13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் இற்றைவரை பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட S - 11 (S11) வகை புகையிரத வலுப்பொறித் தொகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத வலுப்பொறித் தொகுதிகளில் இன்றளவில் பாவனையில் உள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத வலுப்பொறித் தொகுதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவாதக் காலகட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி புகையிரத வலுப்பொறித் தொகுதிகளை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்கூறப்பட்ட புகையிரத வலுப்பொறித் தொகுதிகளில் தற்போது பல்வேறு குறைபாடுகளின் காரணமாக பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4149/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதிர்காமம் - தம்மன்னாவ இரத்தினக்கல் ஏல விற்பனைக் காணியில் CCTV நிழற்படக் கருவி முறைமையொன்று பொருத்தப்பட்டதா;

(ii) CCTV நிழற்படக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்த கால எல்லை யாது;

(iii) மேற்படி CCTV நிழற்படக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டனவா;

(iv) இன்றேல், மேற்படி நிழற்படக் கருவிகள் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டதா;

(v) குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின், மேற்படி CCTV நிழற்படக் கருவிகளை வழங்கிய நிறுவனம் யாது;

(vi) மேற்படி நிழற்படக் கருவி முறைமையை கொள்வனவு செய்வதற்கு அல்லது குத்தகைக்குப் பெறும் பொருட்டு கடைப்பிடித்த நடைமுறை யாது;

(vii) CCTV நிழற்படக் கருவி முறைமையொன்று பொருத்தப்பட்டிருக்கையில் 2012.04.03 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மிய தினமொன்றில் தம்மன்னாவ காணியிலிருந்து படிம மண் இரகசியமாக ஏற்றிச்செல்லப்பட்டுள்ளதா;

(viii) அவ்வாறெனின், அந்த படிம மண் ஏற்றிச் செல்லப்பட்டமை CCTV நிழற்படக் கருவி முறைமையில் பதிவாகியுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3134/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா

என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3524/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொக்கல விமானப்படை முகாமருகில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான வீடமைப்புத் தொகுதியொன்று அமைந்துள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

(iv) அதற்கான நிதியங்கள் பெறப்பட்ட மூலங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி வீட்மைப்புத் தொகுதியில் குடியமர்வதற்காக வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கருத்திட்டம் இற்றைவரை பொதுமக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டிராவிடின் அது தேசிய செல்வத்தை நாசமாக்குவதாகும் என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) ஆமெனில், சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக அல்லது வேறேதேனும் பயனுறுதிமிக்க நடவடிக்கைக்காக அவ்வீடமைப்புக் கருத்திட்டத்தை ஈடுபடுத்த திட்டமிடுவாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 மார்ச் 06, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3146/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 சனவரி 1 முதல் இற்றைவரை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட உதவிகள், சலுசைக் கடன்கள், நன்கொடைகள் ஆகியவற்றின் அளவை தனித்தனியாக வருடாந்த அடிப்படையிலும்;

(ii) வருடமொன்றுக்கு வழங்கப்பட்ட நிதியங்களுக்கான அனைத்தையும் உள்ளிட்ட ஆகக்குறைந்த வட்டிச் செலவு யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு நிதியையும் திரும்பச் செலுத்துவதற்கான காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிடப்பட்ட நிதியங்கள் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திலிருந்தும் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3293/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற இடையூறுகள் குறித்து ஆராய்வதற்காக 2008 ஜூன் மாதத்தில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப அறை இலக்கம் 2/08 இல் இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அமைச்சர்களின் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி உபகுழு இரத்துச் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உபகுழுவின் நடவடிக்கைகளை நடத்திச் சென்ற கட்டிடத்திற்கான வாடகை, தொலைபேசிக் கட்டணப் பட்டியல், மின்சாரக் கட்டணப் பட்டியல் என்பவற்றுக்காக செலவழிக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக ஏற்கப்பட்ட ஏனைய செலவுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிவாரா?

(ஈ) (i) மேற்படி செலவுகளை மேற்கொண்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றுக்கு உரிய செலவுத் தலைப்புக்கள் யாவை;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லையெனின், இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3609/ '13

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி காலப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில்

(i) பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்ததால் இழப்பீடு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடு வழங்கப்படாத முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ளப்பெருக்கு காரணமாக இப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) இப் பயிர்ச்செய்கை காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முழுமையாக சேதமடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக் காணி ஏக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஒரு ஏக்கர்வயல் காணிக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஏனைய மேலதிக பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறாயின், வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிட்டவாறு இழப்பீடு வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்

4105/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை தேர்தல் தொகுதிக்குரிய "குமாரதென்ன" கிராமத்தில்,

(i) வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பிரவேசப் பாதையை அமைப்பதற்காக "கிராமங்களுக்கிடையிலான" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பாதைக்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், அத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி பாதையின் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

(v) பாடசாலையின் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(vi) கிராமவாசிகள் மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வைத்தியசாலை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4153/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் பாடசாலை சீருடைகளுக்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் அளவு எவ்வளவு;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) அத் துணிகளை இறக்குமதி செய்த கம்பனி யாது;

(iv) அக் கம்பனியின் ஊடாக மேற்படி சீருடைத் துணிகள் எந்த அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டன

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்கு சீருடை வழங்குவதற்காக கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் விலைகள் யாவை;

(ii) மேற்படி கம்பனிகளில் குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த கம்பனியா தெரிவுசெய்யப்பட்டது;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட துணிகளில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை;

(v) தெரிவுசெய்யப்பட்ட கம்பனி சமர்ப்பித்த சீருடைத் துணிகளிலும் மேற்கூறிய குறைபாடுகளைப் போன்றே மேலும் பல குறைபாடுகளும் இருந்தன என்பதை ஏற்றுக்கொள்வாரா

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

3148/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள கடன்களின் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிகர ஒதுக்குகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் கூறுவதன் பிரகாரம் மேற்படி ஆண்டுகளில் ஒதுக்குகளின் அதிகரிப்பின் அளவு யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இற்றைவரைக்கும் ஒதுக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கடன்களின் தொகை என்னவென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இறக்குமதிகளின் விகிதமாக ஒதுக்குகளின் தொகை ஆண்டு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கூறப்படுவது போன்று ஒதுக்குகளின் நிலை சாதகமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3529/ '13

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாலிம்பட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயல் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மாலிம்பட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

இ) இன்றேல், ஏன்?

3610/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெகிராவ பிரதேச செயலாளர் பிரிவில் மரதன்கடவல தொடக்கம் பஹல அம்பதலே ஊடாக மூரியாகடவல வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இவ்வீதியின் நீளம் மற்றும் திருத்த வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்;

(iii) இவ்வீதியின் திருத்த வேலைகளை செய்யும் ஒப்பந்தக்கார கம்பனியின் பெயர் மற்றும் அதன் உரிமையாளரின் பெயர் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வீதியின் வேலைகளை நிறைவு செய்ய வேண்டியிருந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இக் கால எல்லைகயில் இவ்வீதியின் வேலைகளை நிறைவு செய்ய முடியாமல் போயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக்கார கம்பனி அநுராதபுர மாவட்டத்தில் வேறு வீதி நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் இந்த ஒவ்வொரு வீதியின் பெயர் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) இவ்வீதி நிர்மாண வேலைகளை நிறைவு செய்யும் போது மேற்குறிப்பிட்டவாறு உரிய காலத்தை தாண்டி, காலம் கடத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்கார கம்பனியினால் வீதி அபிவிருத்தி நிர்மாண வேலைகளை சரிவரச் செய்ய முடியாதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

(ii) அவ்வாறாயின் இவ்வாறானதொரு ஒப்பந்தக்கார கம்பனி தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4106/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசாங்கத்தினால் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள "தேசிய பௌதீக திட்டம்" பற்றி விழிப்புணர்வடைந்துள்ளாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி திட்டத்திற்கு அமைவாக,

(i) பயன்படுத்தப்படவுள்ள வன நிலப் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) வனத்திற்கு குறுக்காக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) வனத்தின் மத்தியில் சுற்றுலா வலயங்கள் நிர்மாணிக்கப்படுவுள்ள இடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4154/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 நவம்பர் 02ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் 2012ஆம் ஆண்டில் விநியோகிப்பதற்காக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்த பாடசாலை சீருடைத் துணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் பாடசாலை சீருடைகளுக்காக மேற்படி நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட துணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அமைச்சரவை அங்கீகாரத்தை விஞ்சும் வகையில் மேலதிகமாக சீருடைத் துணி கொள்வனவு செய்யப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கொள்வனவு காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும்;

(v) இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2014 மார்ச்சு 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3149/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ள அனைத்து கடன்களினதும் மீளச் செலுத்தல் காலத்தை கடன்களுடன் வருடவாரியாகவும்;

(ii) எவ்வாறு வருமானம் ஈட்டப்பட்டு கடன்கள் மீள்செலுத்தப்படும் என்பதை உள்ளடக்கிய காசுப் பாய்ச்சல் கூற்றுக்களையும்;

(iii) அரசாங்கம் பழைய கடன்களை செலுத்துவதற்காக மேலும் கடன் பெறப் போகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் கூறப்பட்டுள்ள காலத்தில் பெறப்பட்ட கடன்களுக்கான செலவினத்தை விட வருமானத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பையும்;

(v) நாடு கடன் பொறியொன்றை நோக்கிச் செல்கின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரசாங்கக் கடன்கள், அரசாங்க முறிகள் போன்றவற்றின் மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக கடன் பெற்றுள்ள சந்தர்ப்பங்களையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3530/ '13

கௌரவ புத்திக பத்திரண,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்புக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வாகன வகைக்கேற்பவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் கேள்விப்பத்திர பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நம்பிக்கைப் பொறுப்புக்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் எவ்வாறான பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பணிப்பாளர் நாயகம் திரு. ரஞ்சித் எல்லேகலவின் பயன்பாட்டிற்காக புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோல் ஹைஹுன்டாய் வாகனத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வாகனத்தை பயன்படுத்தாது வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது ஏன் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3611/ '13

கௌரவ பி. ஹரிஸன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மத்திய மாகாணத்திலுள்ள,

(i) மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்விக் கோட்டங்களின் அடிப்படையிலுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் போதியளவு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டுக்காக வட மத்திய மாகாண கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் மேற்படி மாகாணத்தின் பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக அச்சிடப்பட்ட ஆசிரியர் கைநூல், தவணைக் குறிப்பேடுகள் மற்றும் நாட்காட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அச்சிடப்பட்ட நாட்காட்டியொன்றின் மற்றும் தவணைக் குறிப்பேடொன்றின் விலை யாதென்பதையும்;

(iv) ஆசிரியர் கைநூலொன்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி அனைத்து ஆவணங்களின் அச்சுப் பணிகளுக்காக செலவிடப்பட்ட

மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி அச்சிடும் பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக முன்வந்த நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி அச்சிடல் பணிகளை மேற்கொண்ட அச்சகத்தின் பெயர் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி மாகாண கல்வி அமைச்சரின் புகைப்படத்தை அனைத்து மாகாண சபை பாடசாலைகளிலும் காட்சிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவரது புகைப்படத்தை அச்சிடுவதற்கும் அதற்கு சட்டமிடுவதற்கும் மாகாண சபை நிதியில் ரூபா 15 இலட்சம் பணத் தொகை செலவிடப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4107/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதன் கீழ் நியமனம் பெற்ற பட்டத்தாரிகளின் சம்பளத் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(ii) 260 பதவிப் பெயர்களின் அடிப்படையில் அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளின் பதவியுயர்வு நடைமுறை பற்றி விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளுக்கு, இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதையும்;

(iv) பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆட்சேர்க்கும்போது கவனத்திற்கொள்ளப்படும் உச்ச வயதெல்லை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3150/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் இற்றை வரை உதவிகள், சலுகைக் கடன்கள் மற்றும் மானியங்கள் போன்ற மேற்படி நிதியிடல் வகைகள் மூலமாக அரசாங்கம் சீனாவிடமிருந்து பெற்றுள்ள தொகைகளை வருட வாரியாக வெவ்வெறாகவும்;

(ii) வழங்கப்பட்டுள்ள நிதிகளுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த வட்டிச் செலவினத்தை வருடவாரியாகவும்;

(iii) ஒவ்வொரு நிதியிடலுக்குமான மீளச் செலுத்தல் கால அளவினையும்;

(iv) நிதியிடல் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களையும்;

(v) கடன் வழங்கப்பட்டுள்ள திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான ஒவ்வொரு கடனினதும் காசுப் பாய்ச்சல் கூற்றினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3531/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,__ (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளில் தற்போது சேவை நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வெண்ணிக்கை ஒவ்வொரு அமைச்சிற்கேற்பவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) சேவை நிரந்தரமாக்கப்படுவதற்காக எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழில் வாய்ப்புகளைப் பெற்ற பட்டதாரிகளின் சேவை நிரந்தரமாக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3825/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அனைத்து மருந்தகங்களும் குளிரூட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், இன்றளவில் குளிரூட்டப்படாத அத்தகைய மருந்தகங்களை கொண்டுநடாத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையின் அனைத்து ஆஸ்பத்திரிகளிலும் காணப்படும் மருந்துக் களஞ்சியங்கள் குளிரூட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அனைத்து மருந்து வகைகளையும் குளிரூட்டப்பட்ட இடங்களில் களஞ்சியப்படுத்துதல் அத்தியாவசியமானதா என்பதையும்;

(iv) இன்றேல், களஞ்சியப்படுத்தும்போது குளிரூட்டுதல் அத்தியாவசியமல்லாத மருந்து வகைகள் யாவை என்பதையும்;

(v) அத்தகைய மருந்துகளுக்கு காலாவதியாகும் கால எல்லைகள் கிடையாதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4108/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) உள்நாட்டு ரீதியில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 2013 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிதியில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சினால் ஒவ்வொரு மருந்தாக்கல் நிறுவனத்திலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கொள்வனவிற்கு ஏற்புடையதாக கடன் தொகைகள் செலத்த வேண்டியுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3156/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

(ii) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்களான திருமதி இந்திராணி சுகததாச மற்றும் திரு. திலக் கருணாரத்ன ஆகியோரினால் வெளிப்படுத்தப்பட்டவாறு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பங்குச் சந்தையினைச் சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் தொடர்பில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் நடைபெற்ற அறிக்கை செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சில மாபியா நடவடிக்கைகள் விசாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விசாரணையின் தற்போதைய நிலையினையும்;

(iii) இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iv) நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒத்திணங்கிய சம்பவங்களையும்;

(v) தீர்வுக்கு வருவதற்கு ஏற்பட்ட செலவினையும்;

(vi) இவ்வாறான தீர்வுகளுக்கு வருவதற்கு அரசியல் அழுத்தங்கள் இருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?